# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 10.03.2026**

**OS No. : 411/2022**

**Pw : 1**

**Name : திரு.அண்ணாமலை**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் இன்ஜினியரிங் வேலை செய்துவருகிறேன். பிரதிவாதி ஒரு எல்.ஐ.சி ஏஜென்ட் என்பதால் பாலிசி விஷயமாக பேசி அவருடன் எனக்கு பழக்கமாகிவிட்டது. 23.06.2021 ஆம் தேதி பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டார், 2 நாட்கள் கழித்து பணம் தருகிறேன் என்று சொன்னேன். 24.06.2021ம் தேதி பணம் கொடுத்துவிட்டேன். நான் கொடுத்த பணம் கையிருப்பாக என்னிடம் இருந்த பணமாகும். வீட்டில் சுமார் 8 லட்ச ரூபாய் பணம் வைத்திருந்தேன். மீதி பணத்தை வங்கியிலிருந்து எடுத்து வந்து அவரிடம் மொத்தமாக ரூ.13,50,000/- கொடுத்துவிட்டேன். ரூ.13,50,000/- என்பது மிகப்பெரிய தொகை என்றும், அதை ஒரே நாளில் ரொக்கமாக கொடுப்பதற்கு யாராலும் முடியாது என்றால் சரியல்ல. நான் அவரிடம் பணம் கொடுத்த தேதியில் ஒரு 20 ரூபாய் பத்திரத்தில் பணத்தை பெற்றுக்கொண்டதற்காக ஒரு பத்திரம் எழுதிக்கொடுத்தார். பிரதிவாதியிடமிருந்து அவர சொத்து சம்பந்தமான அசல் ஆவணம் எதையும் நான் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி கடன் பத்திரத்தில் பிரதிவாதி ஆங்கிலத்தில்தான் கையொப்பமிட்டு கொடுத்தார். 24.06.2021 அன்று நான் பணத்தை என்னுடைய வீட்டில் வைத்து பிரதிவாதியிடம் கொடுத்தேன். அப்போது இரவு 08.00 மணி இருக்கும். பத்திரத்தை எழுதிக்கொடுத்தவுடன் நான் பணத்தை அவரிடம் கொடுத்தேன். வா.சா.ஆ. 1 கடன் பத்திரத்தில், கேட்கும்போது கடனை திரும்ப கொடுக்கவேண்டும் என்ற வாசகம் இல்லை என்றால் சரியல்ல, 2 மாதத்தில் பணத்தை

திரும்ப கொடுப்பதாக சொன்னார். 2 மாதத்தில் பணத்தை திரும்ப கொடுப்பதாக வா.சா.ஆ. 1 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி மேற்படி தொகைக்கு மாதந்தோறும் வட்டி தொகையை பெற்றுக்கொண்டேனா என்றால் இல்லை. பிரதிவாதி என்னிடம் வட்டி செலுத்தவில்லை என்பதாலும், 2 மாதத்தில் பணத்தை திரும்ப செலுத்தவில்லை என்பதாலும் நான் அவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. எனது வீட்டில் வைத்து பிரதிவாதிக்கு நான் பணம் கொடுத்தபோது, வேறு யாரும் சாட்சியாக உடன் இல்லை.

வா.சா.ஆ. 1 ஆவணம் ஒரு பதிவுசெய்யப்படாத ஆவணம் என்றும், முத்திரைத்தாள் சட்டம் 1899 பிரிவு 35, 36ன் படி மேற்படி ஆவணத்திற்குரிய முத்திரைக்கட்டணத்தை அபராதத்துடன் செலுத்தவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக பெரிய தொகையை கடனாக கொடுக்கும்போது சொத்தின் அசல் ஆவணத்தையோ, காசோலையையோ பெறுவது வழக்கம் என்று சொன்னால் அப்போதிருந்த சூழ்நிலையின் காரணமாக நான் வேறு எந்த ஆதரவும் பிரதிவாதியிடம் வாங்கவில்லை. பிரதிவாதி போஸ்ட்மேனாக உள்ளார் என்றும், அவரது மனைவி தலைமையாசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றும், பிரதிவாதிக்கு போதுமான வசதி உள்ளது என்றும், என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் அவருக்கு ஒருநாளும் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 1ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியினுடைய கையொப்பம் கிடையாது என்றும், நான் மேற்படி ஆவணத்தை மோசடியாக உற்பத்திசெய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi